# தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம்

# TAMIL UNIVERSITY MOVEMENT

## அறிக்கை
## REPORT

33, அலெக்சாந்திரா வீதி,
கொழும்பு-6.

33, ALEXANDRA ROAD,
COLOMBO 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பல்கலைக் கழக இயக்க ஆட்சிக் குழுவின் அறிக்கை.

## 1. முகவுரை.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்க ஆட்சிக் குழுவின் ஏழாவது அறிக்கை இதுவாகும். இது 1963ம் ஆண்டு டிசம்பர் முதலாந் திகதி தொடங்கி 1965ம் ஆண்டு டிசம்பர் முப்பத்தோராந் திகதி வரைக்கான காலத்திற்கு உரியது. இக்கால வரைக்குள் ஆட்சிக்குழுவின் நடவடிக்கைகள் அனேகமாக திட்டமிடப்பட்டுள்ள செயல் முறை விவசாய கால்நடைப் பயிற்சி நிலைய வேலைகள் தொடர்பாகவே ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இத்துறையில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் காணப்பட்டுள்ளதை அறியத்தருவதில் இவ்வாட்சிக் குழு பெருமகிழ்வு எய்துகிறது. ஆற்றி முடிக்கப் பட்ட வேலைகளின் முழுவிபரமும் இவ்வறிக்கையில் பிறிதோரிடத்தில் தரப்பட்டுள்ளது. அத்தியாவசியமாகக் காணப்பட்ட போதும், சாத்திய பூர்வமாக இருந்த போதும், இவ்வாட்சிக் குழுவானது இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்குப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்காக இவ்வியக்கத்தின் சார்பாகப் போராடி வந்துள்ளது. இந்த நோக்கங்களின் பெறுபேறுகள் முடிவில் அரசாங்க கொள்கைகள் மூலமும், இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையான முயற்சியின் மூலமும் தீர்மானிக்கப் படும் என்பது குறித்தற் பாலது.

## 2. ஆட்சிக் குழுக் கூட்டங்கள்

அறிக்கையிட எடுத்துக் கொள்ளப்பட்ட காலவரைக்குள் இவ்வாட்சிக் குழுவின் பன்னிரண்டு கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. இவற்றுள் ஒன்று, சிறப்புக்கூட்டம், ஏனைய பதினொன்றும் சாதாரண கூட்டங்கள் ஆகும்.

## 3. ஆட்சிக் குழுவில் ஏற்பட்ட மாற்றங்கள்.

திருவாளர்கள் வி. ஜே. விஜயரத்தினசிங்கம், ஏ. சோமசுந்தரம் ஓ. எல். எம். இஸ்மாயில் ஆகியோர் முறையே ஆட்சிக் குழுவில் திருவாளர்கள். எஸ் ஜே. குணசேகரம் ஏ. இரகுநாதர், எஸ். சுப்பிரமணியம் முதலியோரது மறைவினால் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாட்சிக் குழு தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்திற்கு தமது மதிப்பிடற்கரிய சேவைகளை ஆற்றிய திருவாளர்கள் எஸ். ஜே. குணசேகரம், ஏ. இரகுநாதர், எஸ். சுப்பிரமணியம் ஆகியோரதும், சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களதும் அகால மறைவை ஆழ்ந்த வருத்தத்துடன் குறித்துக்கொள்ளுகிறது.

## 4. சட்ட அந்தஸ்து,

பல முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும் இயக்கத்தை சட்ட பூர்வமாகப் பதிவு செய்வதன் மூலமோ, அன்றி தர்மகர்த்தாக்கள் சபையை பதிவு செய்வதன் மூலமோ இவ்வியக்கத்திற்கு சட்ட அந்தஸ்தை பெறுவதற்கு இன்னும் முடியவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. நிதி

1963-64-1964-65 வருடங்களுக்கான கணக்குகளின் ஆய்வு அறிக்கைகளும் கணக்கு ஆய்வாளர்களின் அறிக்கைகளும் கௌரவ பொருளாளரினால் அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும். அங்கத்தவர்களதும், கூட்டு அங்கத்தவர்களதும் கட்டுப் பணங்களும் நலன் விரும்பியோரின் நன்கொடைகளும் தொடர்ந்து இவ்வியக்கத்தின் முக்கிய வருவாயாக இருந்து வருகின்றன. இயக்கத்தின் நிதிக்கு வழங்கு தொகைகள் வெகுவாகக்குறைந்து வருவதை மிக வருத்தத்துடன் குறிப்பிடவேண்டியுள்ளது ஏற்கனவே நிதி சேகரிப்பதற்குப் பிரசாரக் கூட்டங்கள் கூட்டுவதற்கோ, ஊக்குத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கோ ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. உப்புவெளி செயல்முறை விவசாய கால்நடைப் பயிற்சி நிலையத்தின் முதலாவது படி வேலைகள் செய்து முடிந்த பின்னர் இத்தகைய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதுதான் சிறந்தது என்று ஆட்சிக்குழு கருதியமைதான் அதற்குக் காரணம். நிதி வசூல் திட்டமொன்றை ஏற்படுத்திச் செயற்படுத்துவதற்குத் திரு. ஆர். இராசரத்தினம் அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழுவொன்று, தற்போது இவ்வாட்சிக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் அ. சின்னத்தம்பி, திருவாளர்கள். சி. கந்தசாமி, ஏ. சின்னத்தம்பி, நி. இராசதுரை ஆகியோர் இச் செயற்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாவர். திரு பொ. கதிரவேற்பிள்ளை இச் செயற்குழுவின் செயலாளராவர் உப்புவெளிக் கட்டிடங்களின் முதலாவது படி வேலைகளைப் பரிபூரணமாக்குவதற்கு நிதி நிலமை பற்றுக் குறையாகக் காணப்பட்டமையால் பல்கலைக் கழக ஆட்சிக்குழு இயக்கத் தர்மகர்த்தாக்கள் சபையின் அனுமதியுடன் இயக்கத்தின் முதலீடான ரூபா. நாற்பதினாயிரம் பெறுமதியான அரசாங்க பங்குப் பத்திரங்களை ரூபா. முப்பத்தொன்பதினாயிரத்துநூற்றியெழுபத்து நாலுக்கு விற்றுள்ளது. இவ்வரசாங்க முதலீட்டின் மூலம் வட்டியாக ரூபா. 3,732-92 ஐ உழைத்திருப்பதால் இந்த விற்பனையின் காரணமாக நட்டமேதும் ஏற்படவில்லை.

அறிக்கையிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட கால வரம்பிற்குள் கீழ்க்கண்ட பெரியார்களிடமிருந்து கீழ்க்காணும் தொகை சிறப்பு நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திரு. எஸ். ஆறுமுகநாதன் ......... ... .. | ரூபா | 10,000/ |
| திரு. என் நடராசா......... ... ........ .. | ரூபா | 3,600/ |
| திரு. டபிள்யூ எச். ரி. பார்ட்லெட் ......... | ரூபா | 1,000/ |
| திரு. எஸ். ஏ. டேவிட் . ... ................ | ரூபா | 500/ |

## 6. ஆயுட்கால அங்கத்தவர்கள்

கீழ்க்காணப்படுவோர் கீழ்காணப்படும் காரணங்களுக்காக ஆயுட்கால அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள் வி. எம். சிவசிதம்பரம், எஸ். ஆறுமுகம் ஆகியோர் இயக்கத்துக்கு இன்றியமையாத சேவைகள் ஆற்றியதற்காகவும், திரு. எஸ். ஆறுமுகநாதன் ரூபா 10,000 நன்கொடை வழங்கியதற்காகவும், திரு. என். நடராசா ரூபா 3,600 நன்கொடை வழங்கியதற்காகவும், திரு. டபிள்யூ எச். ரி. பார்ட்லெட் ரூபா 1,000 நன்கொடை வழங்கியதற்காகவும், ஆயுட் கால அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கட்டிடக் குழு

கீழ்க்கண்டோரைக் கொண்ட கட்டிடக் குழு தொடர்ந்து பணியாற்றி வருகிறது:—
திரு சி இராசையா, பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம், திரு. சி. கந்தசாமி, திரு எஸ். தங்கராசா, திரு. எஸ் ஆறுமுகம். அங்கத்தவர்களாகவும் திரு. பொ. கதிரவேற்பிள்ளை இக்குழுவுக்கு செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்கள். கட்டிடவேலைகள் பற்றி இக்குழு ஆட்சிக்குழுவுக்கு ஆலோசனைகள் வழங்கி வருகின்றன.

## 8, சட்டக்குழு.

திரு. என். சின்னத்தம்பி, திரு. என். கிருஷ்ணதாசன் திரு. சி. இரங்கநாதன், திரு. எஸ், அம்பலவாணர், திரு. வி முருகேசு, திரு. வி. வேலாயுதபிள்ளை ஆகியோருடன் திரு. பொ. கதிரவேற்பிள்ளையை செயலாளராகக் கொண்டு இச்சட்டக் குழு தொடர்ந்து இயங்கி வருகிறது இவ்வியக்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பல்வேறு சட்ட விவகாரங்கள் பற்றி இக்குழுஆட்சிக் குழுவிற்கு ஆலோசனை வழங்கி வருகிறது.

## 9. திருகோணமலை நிலங்கள்.

இவ்வியக்கம் இதுவரை ரூபா 214, 399-40 பெறுமதியான நிலங்களைக் கொள்வனவு செய்துள்ளது. திருகோணமலை உட்துறைமுக வீதியிலுள்ள 5 ஏக்கர் நிலமும் உப்புவெளியிலுள்ள 86 ஏக்கர் நிலமும் இதற்குள் அடங்கும்.

இவ்வாட்சிக் குழு அதன் சட்டக் குழுவின் ஆலோசனைக் கிணங்க இவ்வியக்கத்திற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட நிலங்களின் உறுதி தெளிவாகக் காட்டும் படியாக திரும்பவும் எழுதுவதற்குத் தீர்மானித்துள்ளது. உட்துறைமுக வீதியிலுள்ள நிலத்துக்கான ஆதன உரிமைகள் உறுதியாக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. உப்பு வெளி நிலங்களைப் பொறுத்த மட்டில் உறுதிகள் எழுத்து வடிவத்தில் ஆக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் ஆற்றி முடிக்க முடியாது போய்விட்டது. டாக்டர். டபிள்யூ எல். பி. தசநாயக்காவிடமிருந்து கொள்வனவு செய்த நிலத்துக்கான உறுதி மட்டும் திருப்பி எழுதிமுடிக்கப் பட்டுள்ளது.

உறுதி வரையறுப்பு தொடர்பான காரியங்களில் உப்புவெளி நிலங்களைப் பொறுத்தமட்டில், நிலம் விற்றோர் இப்பொழுது வீடுகள் கட்டக் கூடிய $\frac{1}{4}$, $\frac{1}{2}$, ஏக்கர் துண்டுகளை தங்களுக்கு இவ்வியக்கம் விற்கவேண்டுமென்று எதிர்ப்பார்ப்பதாகத் தெரிகிறது. இவ்வியக்கத்துக்காகத் திரு. ரி. இராசதுரை காணிகள் கொள்வனவு செய்வதற்க்கு பேச்சுவார்த்தைகள் நடத்தியபோது 5 ஏக்கரும் அதற்குக்குறைவாக விற்பனை செய்தவர்களுக்கு $\frac{1}{4}$ ஏக்கர் நிலமும் 10 ஏக்கரும் அதற்குக்கூடுதலாக விற்பனைசெய்தோர்க்கு $\frac{1}{2}$ ஏக்கரும் விற்பதற்த சம்மதம் தெரிவித்ததாக நம்பப்படுகிறது. இது தொடர்பாக இவ்வியக்கத்திற்கு உதவுவதற்கு திருவாளர்கள் ரி. இராசதுரை, ஆர். இராசரத்தினம், ஆர். முருகுப்பிள்ளை, ஆர். சம்பந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ. கதிரவேற்பிள்ளை (செயலாளர்) ஆகியோரைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இக்குழு காணி விற்றவர்களுக்கு கட்டிடத் துண்டுக்காணிகள் விற்பனை செய்வதற்கான விதிமுறைகள் பற்றி ஆட்சிக்குழுவுக்கு ஆலோசனை வழங்கும்.

உட்துறைமுக வீதியிலுள்ள நிலத்தில் அத்துமீறிக்குடியிருக்கும் நபர்களுடன் சட்டக்குழுவின் ஆலோசனையின் பேரில் இவ்வியக்கத்தின் தர்மகர்த்தாக்கள் குடியிருப்பு ஒப்பந்தம் ஒன்றை எழுதியுள்ளார்கள். குடியிருப்பாளர் ஒப்பந்தத்தை மீறியதற்காக குடியிருப்பவர் மீது திருகோணமலை நீதிமன்றத்திலே வழக்குத்தொடரப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தை மீறிக்குடியிருந்தோரை அந்த இடத்தை விட்டு 31-12-65-ல் நீங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. உப்புவெளி நிலத்தில் குடியிருப்புக் கொண்டவர்களில் ஒருவரான திரு. யோசேப் என்பவர் நட்டஈடாக ரூபா 1,400/ பெற்றதன் பேரில் நிலத்தை விட்டு நீங்கினர். இத்தொகை அக்குடியிருப்பாளர் கட்டி பெழுப்பியிருந்த வீட்டின் பெறுமதியாகும். இக் கட்டிடமும் இப்பொழுது அழிக்கப்பட்டு விட்டது. இந்தக் காரியத்தை இவ்வளவு எளிதில் முடித்துக் கொடுத்ததற்காக திரு. என். கிருஷ்ணதாசனுக்கு எமது ஆட்சிக்குழு நன்றிக் கடப்பாடுடையதாகின்றது. அன்னாரின் உதவியின்றி இது இவ்வளவு எளிதாகச் சாதிக்கப் பட்டிருக்கமுடியாது என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

இரண்டு குடியிருப்பாளர்களுக்கு சட்டப்படி நிலத்தைவிட்டு நீங்குவதற்கு அவகாசம் கொடுத்து ஆரம்ப அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட அவகாசம் காலாவதியானதும் அவர்கள் இயக்க நிலத்திலிருந்து வெளியேறாதிருந்தால் சிறு குடியிருப்பாளர் சட்டப்படி திருகோணமலை நீதிமன்றத்தில் அவர்களை வெளியேற்றுவதற்கு வழக்குத் தொடரப்படும்.

## 10. செயல்முறை விவசாயக் கால்நடைப் பயிற்சி நிலையம்.

செயல் முறைவிவசாயக் கால்நடைப் பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கு எடுக்கப்படவேண்டிய பல்வேறு வழிவகைகளையும் பற்றி இவ்வாட்சிக்குழுவின் கடந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இத் திட்டத்தின் முதற்படி வேலைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது என்பதை அறிக்கையிடுவதில் இவ்வாட்சிக்குழு பெருமகிழ்வெய்துகிறது. கீழ்க்காணப்படும் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு முடிந்துள்ளன: (படங்களை பிற்பக்கத்தில் உள்ள இணைப்பில் காணவும்.)

### (அ) அலுவலர் விடுதி.

தற்போது இவ்விடுதி உப்பு வெளி நிலைய அதிபரான திரு. ஜெகநாதனின் வசிப்பிடமாக அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) ஆய்வுக்கூடமும் பண்டகசாலையும்:

சுமார் முப்பது மாணவர்களைக் கொள்ளக்கூடிய ஆய்வுக் கூடமொன்று ரூபா 40,000/ செலவில் கட்டப்பட்டது. ஆய்வுக் கூடத்தில், மாணவர்களின் பாவனைக்குத் தேவையான மேசைகள், அலுமாரிகள், சிறுபெட்டிகள் (கப்போர்ட்டுகள்) ஆகியன பொருத்தப்பட்டுள்ளன. பண்டகசாலை ஆய்வுக் கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## (இ) விடுதி, உணவுக்கூடம், சமையலறை:

திருகோணமலையில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, மாணவர்களுக்கான தங்குமிட வசதியையேற்படுத்துவதென முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது. 1964ம் ஆண்டு ஜூன் மாதத்தில் பல்கலைக் கழக காம் பஸை) வளவை நேரில் பார்வையிட்ட நிலையத்தின் உயர்கல்விச் செயற்குழு, பயிற்சி பெறுவோர் உண்மையான விவசாய சூழலில் ஒன்றுகூடி தொழில் புரிந்து பயில வேண்டியதவசியமெனவும், எனவே வளவினுள்ளேயே மாணவர்களுக்கு நிரந்தரத் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் ஏகமனதாக அபிப்பிராயம் தெரிவித்தது. இதையடுத்து படுக்கையறை, உண்டியறை, சமையலறை, மலகூடம் ஆகியவற்றிற்கான இரண்டாம் கட்ட, கட்டிட வேலையை ஆட்சிக்குழு ஆரம்பித்தது. ரூபா 1,50,000/ செலவில் இக்கட்டிட வேலைகள் தற்சமயம் பூர்த்தியாகியுள்ளன. புதிய கட்டிடங்களில் 30 மாணவர்களும் அவர்களின் பொறுப்பாசிரியரும் தங்க முடியும். இக்கட்டிடங்கள முதலாம் வருடமாணவர்களுக்குமட்டுந்தான் உதவும்

## (ஈ) மின்சார நிலையம்:

இவிசிதருக்கெனக் கட்டப்பட்ட வீடு, தற்சமயம் மின்சார நிலையமாகவும், பண்டகசாலையாகவும் மாற்றப்பட்டுள்ளது. ஒரு மின்சார உற்பத்தியந்திரம் (ஜெனரேட்டர்) ரூபா 8,944.25 செலவில் வாங்கப்பட்டது. வனத்திணைக்களத்திடமிருந்து மரத்தூண்கள் ரூபா 1,542-87 சதம் செலவில் வாங்கப்பட்டன. நிர்வாக அதிபரின் தங்குவிடுதி, மாணவர்களின் விடுதி, உண்டியறை, சமையலறை, கிணறு, பாதைகள் ஆகியவற்றிற்கும் மின்வெளிச்சம் வழங்கப்படும்.

## உ கிணறுகள்:

மேட்டு நில விவசாய அபிவிருத்திக்கென உப்பு வெளிக்காணிகளில் இரு கிணறுகள் தோண்டிக்கட்டப்பட்டன. மேட்டு நிலப் பயிர்களுக்கு இக் கிணறுகளின் நீர் உபயோகிக்கப்படும். இக் கிணறுகள் தோண்டிக் கட்டுவதற்கு ரூபா 8,000/ செலவாகியது. காளடைவில் இப்பகுதியில் மேலும் பல கிணறுகள் தோண்ட வேண்டியேற்படும்.

## (ஊ) நீரிறைக்கும் இயந்திரங்கள்.

ரூபா 3,000/ செலவில் ஒரு டீசல் எண்ணெய் இயந்திரமும், ரூபா 1215 செலவில் ஒரு மின்சார இயந்திரமும் வாங்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (எ) வேலிகளுக்கான முட்கம்பிகள்.

ஆய்வுக் கூடமும், விடுதியும் அமைக்கப்பட்டுள்ள காணிகளுக்கு முட்கம்பிகளால் வேலியடைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 27 ஏக்கர், 1 ரூட் 6 பரப்பு நிலத்திற்கு வேலியடைக்கப் பட்டுள்ளது.

## (ஏ) நெற்காணிகள்

போதியவளவு விவசாய நிலம் கிடைப்பதிலேயே, மாணவர்களுக்கு விவசாயப் பயிற்சியளிப்பதன் வெற்றி யடங்கியுள்ளது. நீர்ப்பாசன வசதியோடு போதியவளவு விவசாயக் காணிகளை வாங்க தற்சமயம் இயக்கத்திடம் தகுந்தளவு நிதியில்லாமையால் பயிற்சியளிப்பதற்கெனக் குத்தகைக்குக் காணிகள் எடுப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய கம்பல காமத்தில் 8½ ஏக்கர் நெற்காணி ஐந்து வருடக் குத்தகைக்கு எடுக்கப்பட்டது. ஏற்கனவே இக்காணிகளில் இருபோக விவசாயம் செய்யப்பட்டுள்ளது.

## (ஐ) டிராக்டரும் டிரெய்லரும்.

1962ல் டிராக்டரும் (உழவு யந்திரம்), டிரெய்லரும் (பாரம் இழுக்கும் இயந்திரம்) வாங்கப்பட்டது பற்றிய விபரம் கடந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இயக்கத்தின் கட்டிட வேலைகளில், இந்த இயந்திரங்கள் பெரிதும் பயன்பட்டன. பயிற்சி நிலையத்தின் குறிப்பிடத்தக்க பகுதி வேலைகள் பூர்த்தியாகியிருக்கும் இவ்வேளையில், நிலையம் இயங்க ஆரம்பிக்கு முன், மேலும் பல அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியது அவசியம். ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் முதலாண்டு மாணவர்களின் பாவனைக்கு போதுமானவை. ஆனால் இரண்டாவது, மூன்றாவது ஆண்டு மாணவர்களுக்கான கட்டிட வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியதவசியம். அத்தோடு இரசாயனப் பொருள்கள், உபகரணங்கள், விடுதிகள், உண்டியறை, வகுப்பறைகளுக்கான தளபாடங்கள், சமையலறைக்கான பாத்திரங்கள் ஆகியவை வாங்கப்பட வேண்டும். மிருகப்பண்ணைக்கான கால்நடைகளும் கட்டிடங்களும் தேவை. அத்துடன் ஆசிரியர்கள் அலுவலர்கள் உட்பட சகல ஊழியர்களும் நியமிக்கப்படவேண்டும். இத்திட்டத்தைப் பூர்த்தியாக்க இரண்டரை இலட்சரூபா தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது வருட மாணவர்களை அனுமதிக்கும்போது, கழக நிலையத்தில் ஒரு உண்மையான விவசாயப் பண்ணையின் தோற்றமும் அமைப்பும் நிலவ வேண்டுமென்பதே, கல்விக் குழுவின் மனப்பூர்வமான நோக்கமாகும்.

## (11) காணிகள்.

இயக்கத்தின் நடவடிக்கைகள் குறித்து முடிக்குரிய காணி ஒன்றை பெறுவதற்கு கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெறவில்லை. வவுனியா, திருகோணமலை மாவட்டங்களில் 750 ஏக்கர் முடிக்குரிய காணியைக் குத்தகைக்குப் பெறுவதற்கு 1965ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விடயம் குறித்து தலைவரும், நிர்வாக காரியதரிசியும் காணி, நீர்ப்பாசன, மின்விசை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியை 1965, அக்டோபர் மாதம் 28-ந் திகதி பேட்டி கண்டனர். இது பற்றிய இறுதி முடிவு எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

## 12 மழை வீழ்ச்சி அவதான நிலையம்:

உப்புவெளியிலுள்ள இயக்கத்தின் வளவில் மழைவீழ்ச்சி அவதான நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையத்திற்குத் தேவையான இயந்திர சாதனத்தை வானிலை அவதானத் திணைக்களம் வழங்கியது. நிலைய அதிபர் திரு ஜெகநாதன் இந்த அவதான நிலையத்திற்கு பொறுப்பாக இருந்து வருகிறார். இந்த நிலையத்திலிருந்து பெறப்பட்ட கணிப்புவிவரங்கள் வானிலை அவதானத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு வருகிறது மழைவீழ்ச்சி, அதிபரினால் பதிவு செய்யப்பட்டு வருகிறது. காலப்போக்கில் விவசாயம் செய்யக்கூடியபயிர்களை நிர்மானிப்பதற்கு மழைவீழ்ச்சி பற்றி ஆராய்வதற்கு இது அவசியமாகும்.

## 13 சூறாவளியால் ஏற்பட்டசேதம்.

1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் திருகோணமலை, வவுனியா, மன்னார் ஆகியபகுதிகளில் ஏற்பட்ட சூறாவளியின் காரணமாக உப்புவெளியிலுள்ள இவ்வியக்கத்தின் கட்டிடங்களுக்கு ரூபா 20,000/ பெறுமதியளவு சேதமேற்பட்டது. இவ்வாறு சேதப்பட்டகட்டிடங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

காவலர் கழகத்தின் செயல்முறையை ஆராய்ந்து இந்த நிறுவனத்தை மேலும் ஸ்திரப் படுத்தும் நடவடிக்கைகளை மேற் கொள் வதற்கென ஆட்சிக்குழு செயற்குழு ஒன்றை நியமனஞ் செய்தது.

ச்செயற்குழுவில் கீழ்க்கண்டோர் அங்கம் வகிக்கின்றனர்:-

பேராசிரியர். ஆ. வி. மயில்வாகனம் (தலைவர்.)
திரு. என். கிருஷ்ணதாசன்.
திரு. ஆர். இராசரத்தினம்.
திரு கே. ஏ. செல்லையா.
திரு. சி. இராசையா.
திரு என். ஆறுமுகநாதன்.
திரு எஸ். செல்வரத்தினம்.
திரு சி. சற்குணனந்தன்.
திரு. சி கந்தசாமி
திரு. பொ. கதிரவேற்பிள்ளை. (ஏற்பாடு செய்பவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் கழகம் மாலை வகுப்புகளுடன் சேர்த்து பகல் வேளையும் வகுப்புகளை நடத்த வேண்டுமென இந்தச் செயற்குழு சிபார்சு செய்தது. ஜி. சி. ஈ (உயர்தர),ஜி. சி. ஈ. (சாதாரண) வகுப்புகளை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முழுநேரச் சம்பளம் பெறும் அதிபர் ஒருவரையும் நியமிக்குமாறு செயற்குழு சிபார்சு செய்தது. செயற்குழுவின் சிபார்சை அனுசரித்து, யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியின் இளைப்பாறிய அதிபர் திரு. எம். கிட்ணபிள்ளை எம். ஏ. (கேம்பிரிஜ்) பி. எஸ். ஸி. (லண்டன்) நாவலர் கழகத்தின் அதிபராக நியமிக்கப் பட்டார்.

நிறுவனத்தின் சட்டப்பிரமாணங்களை அனுசரித்தே நாவலர் கழகம் தற்சமயம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. நிர்வாகிகள் சபைக்கு பதிலாக ஆளுனர்கள் சபை ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. அதில் அங்கம் வகிப்பவர்கள் வருமாறு:-

பேராசிரியர். ஏ. சின்னத்தம்பி (அதிபர்)
பேராசிரியர் பீ. கே. சண்முகம்.
திரு. சி. இராசையா.
ரே. என். கிருஷ்ணதாசன்.
திரு. எஸ். செல்வரத்தினம்.
திரு. சி. சற்குணனந்தன்.
திரு. சி. கந்தசாமி.
திரு. எம். கிட்ணபிள்ளை(தலைவர்)
திரு. பீ. கதிரவேற்பிள்ளை.
)பதிவாளரும் செயலாளரும்.)

அறிக்கையிட எடுத்துக் கொண்ட காலவரைக்குள் இவ்வியக்கம் நாவலர் கழகத்தை நடத்துவதற்கான மூலாதாரச்செலவுக்கென ரூபா21, 000/ மானியம் வழங்கியுள்ளது. எல்லா வகையாலும் நாவலர் கழகம் இவ்வியக்கத்திலிருந்து நிதியுதவி பெறுது அன்றுட செலவினங்களைக் கவனிக்கக் கூடியதாய் இருந்தது.

## 14 அங்கத்துவம்

1965ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் திகதி வரை இவ்வாட்சிக் குழுவின் அங்கத்துவம் பின்வருமாறு இருந்தது.

இவ்வியக்கத்தின் அங்கத்தவர் தொகை பெரிதும் குறைந்து போயிற்று. இப்படியான சூழ்நிலையை உணர்ந்துள்ள ஆட்சிக்குழுவும் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளவோ, அங்கத்துவத் தகைமையிழந்தோரை மீண்டும் சேர்த்துக் கொள்வதற்கோ எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. செயல்முறைவிவசாயக் கால்நடை நிலையத்தை ஏற்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டாலொழிய இயக்கத்தின் அங்கத்தவர்களை அதிகப் படுத்துவதற்கு வழிவகைகள் எடுக்கக் கூடாது என்று உணரப்பட்டமையாலேயே அவ்வாறு செய்யப்பட்டது. இவ்வியக்கத்தின் அங்கத்தவத் தகைமையை அற்றுப் போகவிட்ட பழைய அங்கத்தவர்கள் இந்த அறிக்கையைப் பார்வையிட்ட பின்னர் இவ்வியக்கத்தில் மீண்டும் சேர்ந்து செயல் முறை விவசாயக் கால்நடைப் பயிற்சி நிலையத்தில் அதிவிரைவில் வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு கைகொடுத்து உதவுவார்கள் என்று பெரிதும் விரும்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# REPORT OF THE COUNCIL OF THE TAMIL UNIVERSITY MOVEMENT

## 1 INTRODUCTION:

This is the seventh report of the Council of the Tamil University Movement, and it covers the period 1st December 1963 to 31st Decembdr 1965. During this period, the activities of the Council were mostly devoted to the work connected with the Practical School of Agriculture and Animal Husbandry at Uppuveli. The Council has great pleasure in reporting that considerable progress has been made in this direction and a full account of the tasks accomplished appears elsewhere in this report. Wherever possible and whenever neoessary the Couucil also had carried on the agaitation, on behalf of the Movement for the establishment of a University for the Tamil Speaking Peoples of Ceylon. It will be appreciated that the achievement of these objectives will ultimately be decided on the one hand by governmental policies and on the other by the united efforts of all Tamil speaking peoples of the country.

## 2. COUNCIL MEETING:

Tweleve meetings of the Council were held during the period under review. Of these eleven were ordinary meetings and one was a special meeting.

## 3. CHANGES IN THE COUNCIL:

Messrs V. J. Wijeratnasingham, A. Somasundram and O. L. M. Ismail were elected to fill the vacancies in the Council caused by the deaths of Messrs S. J. Guaasekaram, A. Ranguuthar and S. Suppiramaniam respectively.

The Council racords with deep regret the untimely deaths of the following members who have rendered very valuable services to the Movement:

Mrs. S. J. Gunasekaram
Mr. A. Ragunathar
Mr, S. Suppiramaniam
Sir Kanthiah Vaithianathan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. LEGAL STATUS:

Inspite of several efforts, it has not yet been possible to obtain legal status for the Movement,either by incorporation of the Movement or of the Board of Trustees.

5. FINANCES:

The audited statement of accounts for the years 1963-64 and 1964-65 and the reports of the Auditors will be presented to the members by the Hony.Treasurer. Subscriptions from members and associate members and donatioos from benefactors continue to be the chief source of income of the Movement. It is noted with regret that there has been a steady decline in the contributions to the fund of the Movement. No efforts were made earlier either to organise propaganda meetings or to launch a campaign for the collection of funds. The Council felt that such a step should await the completion of the buildings necessary for the first stage of the Practical School of Agriculture and Animal Husbandry at Uppuveli. The Council has now appointed a committee with Mr. R. Rajaratnam as Chairman to organise a collection campaign. The other members of the committee are Prof. A Sinnathamby, Messrs C. Kandasamy, A Sinhathamby and T. Rajathurai with P. Kathiravelupillai as secretary, In view of the paucity of funds necessary for the completion of the first stage of buildings at Upyuveli, the Council of the Movement has with the sanction of the Board of Trustees sold its investments of Rs 40,000/- on Governments Securities for a sum of Rs 39,174/- There was however no loss on this transaction as the Movement has earned Rs. 3,732-92 by way of interest.

During the period under reviw the following special donations were received:

| | |
|---|---|
| Mr. S. Arumuganathan | Rs. 10,000/- |
| Mr. N. Nadarasa | Rs. 3,600/- |
| Mr. W. H. T. Bartlet | Rs. 1,000/- |
| Mr. S. A. David | Rs. 500/- |

6. LIFE MEMBERS:

The following were elected life members of the Movement for reasons set out against their names:

| | |
|---|---|
| Mr. V. M. Sivasithamparam | For outstanding services rendered to the Movement |
| Mr. S. Arumugam | For outstanding services rendered to the Movement |
| Mr. S. Arumuganathan | for donating Rs. 10,000/- |
| Mr. N. Nadarasa | for donating Rs. 3,600/- |
| Mr. W. H. T. Bartlet | for donating Rs 1 000/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. WORKS COMMITEE:

The Works Committee with the following members:

Mr. C. Rasiah (Chairman)
Prof. A. W. Mailvaganam
Mr. C. Kandasamy
Mr. S. Thangarajah
Mr. S. Arumugam and
Mr. P. Kathiravelupillai as Secretary continues to function and advises the Council regarding building operations.

8. LAW COMMITTEE:

The Law Committee with the following members:

Mr. N. Sinnathamby
Mr. N. Krishnadasan
Mr. C. Ranganathan
Mr. S. Ambalavanar
Mr. V. Murugesu
Mr. V. Velauthapillai and
Mr. P. Kathiravelupillai as Secretary continues to function. This Committee advises the Council on various legal matters connected with the activities of the Movement.

9. LANDS AT TRINCOMALEE:

The Movement has so far purchased lands to the value of Rs. 214.399/40. This includes 5 acres of land at Inner Harbour Road, Trincomalee and 86 acres at Uppuveli.

It was mentioned in the last report that Council on the advice of its Legal Committee had decided to re-execute the deeds in respect of the lands purchased for the Movement. The execution of the deeds of rectification in respect of the Inner Harbour Road land has been completed. Regarding the lands at Uppuveli, though the deeds of rectification have been drafted, it has not been possible to execute the deeds in spite of repeated efforts. Only one deed relating to the purchase made from Dr. W. L. B. Dassanayake has been completed.

In connection with the execution of the deeds of rectification in respect of the Uppuveli lands it has been found that most of the Vendors are now asking the Movement to sell them

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

building blocks in extent $\frac{1}{4}$ and $\frac{1}{2}$ acre. It appears that at the time when Mr. T. Rajathurai negotiated the purchase on behalf of the Movement, he had told some of the Vendors that the Movement, would convey to them $\frac{1}{4}$ acre of land to those who sold 5 acres and under and $\frac{1}{2}$ acre to those who sold 10 acres and over. In order to assist the Movement in this connection a committee consisting of Mr. T. Rajathurai, Mr. R. Rajaratnam, Mr. R. Murugupillai, Mr. R. Sambanthan and Mr. P. Kathiravelupillai as Secretary has been appointed by the Council to go into this matter and to advice the Council on the terms and conditions upon which the Movement is to convey building blocks to the Vendors.

The Trustees of the Movement on the advice of the Legal Committee entered into tenancy agreements with the squatters on the Inner Harbour Road Land. An Application was filed in the Court of Requests, Trincomalee against one of the squatters who had committed a breach of the tenancy agreement. The Court ordered the squatter to vacate the premises by 31-12-65. One of the squatters in the Uppuveli land, Mr. Joseph vacated the premises on payment of Rs. 1,400/- as compensation. This sum represented the value of the buildings erected by the squatter and this building has since been demolished. The Council is thankful to Mr. N. Krishnadasan but for whose intervention this matter and the tenancy agreements in respect of the Inner Harbour Road land could not have been finalised.

Preliminary notices have been issued on two squatters giving them time according to law to vacate the premises. On the expiry of the stipulated periods actions will be filed in the Court of Requests of Trincomalee to have the squatter ejected from the Movement's premises if they continue to remain in forcible possession.

## 10. PRACTICAL AGRICULTURE & ANIMAL HUSBANDRY TRAINING CENTRE:

In the last report of the Council, reference was made to the various steps proposed to be taken in regard to the establishment of the Practical Agriculture and Animal Husbandry Training Centre on the lands at Uppuveli. The Council has pleasure in reporting that substantial progress has been made in regard to the first stage of this programme. The following items of work have been completed under the direct supervision of Mr. P. Jeganathan the Director who

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

continues to reside at the campus of the Movement at Uppuveli: (Please see appendix for photographs)

(a) Staff Bungalow

At present this bungalow serves as the residence of Mr. P. Jeganathan.

(b) Laboratory & Store Room:

A Laboratory designed to accomodate about 30 students has been constructed at a cost of about Rs. 40,000/- This laboratory has been equipped with the necessary laboratory tables cupboards and almyrahs. A store-room is also attached to the laboratory.

(c) Dormitory, Dining Hall & Kitchen:

Earlier it was intended to make temporary arrangements for the residence of the students in a rented house in Trincomalee. Accordingly the Movement rented out a house at Green Road, Trincomalee through Muhandram Muthucumaru a member of the Council. Since this building was not required for the immediate use of the Movement the Council decided to sub-let the premises to a nominee of Muhandram Muthucumaru. The Council has now terminated the tenancy with effect from 31st September 1965 and the building has been handed over to the owner. However the last tenant has failed to pay the Movement rent amounting to Rs. 1,495/-. Consequent to the decision of the Council an action has been filed in the District Court of Trincomalee, to recover the arrears of rent from Mr. P. Raju, the tenant referred to. The Academic Committee of the Centre which visited the campus in June 1964 was of the unanimous opinion that trainees should be provided with residential facilities within the campus since it was necessary that the trainees should live and work in a truly agricultural surrounding. Consequently the Council launched on the construction of the buildings consisting of the dormitory, dining hall, kitchen and lavatories. These buildings have been completed at a cost of Rs. 150,000/- and are designed to provide accommodation for 30 students and a house master. These buildings could serve only the students in their first year of study.

(d) Power House:

The Quarters built and intended for occupation by the clerk have now been converted into a power house cum store room. An

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

electric generator has been purchased at a cost of Rs. 8,944/25. Wooden posts to the value of Rs. 1,542/87 have been purchased from the Forest Department for the work on wiring and supply of electricity to Director's bungalow, the dormitory, dining hall, kitchen, wells roadways etc.

(e) Wells

For the purpose of developing highland cultivation, two new wells were sunk on the lands at Uppuveli. Water from these wells will be used for irrigating the highland crops to be cultivated on the lands that will be cleared and brought under cultivation. The cost of constructing and building these two wells is about Rs. 8,000/-. In course of time it will become necessary to sink more wells on these lands.

(f) Water Pumps:

Two water pumps; one a diesel pump costing Rs. 3,000/- and the other a power pump costing Rs. 1, 215/- have been purchased.

(g) Barbed Wire Fencing:

The lands on which the laboratory and the dormitory etc. are situated have fenced with barbed wire. The total extent of the land fenced is 27 acres - 1 rood and 6 perches.

(h) Paddy lands:

The successful training of students in agriculture depend on the availability of suitable land for cultivation. Since the Movement does not have enough funds at present to purchase paddy lands with irrigation facilities, the Council decided to lease lands to be used for instructing the trainees. Accordingly 8½ acres of paddy field in Tambalagamam have been leased by the Momement for a period of five years. This land has already been cultivated for two seasons by the Movement.

(i) Tractor & Trailer:

Reference was made in the last report to the purchase of a Tractor and Trailer in 1962. These have been extremely useful in connection with the building operations of the Movement. Mr. P.Jeganathan in addition attends to the pioneering work in connection with the establishment of the Training Centre.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

While a considerable portion of the work in connection with the establishment of the proposed Training Centre have been completed, it will be necessary to ensure the provision of a number of other items before the commencement of the Centre. The buildings that have been completed will be sufficient to cater to the needs of the first year trainees. But it is necessary to commence work in the buildings necessary for the second year and third year students right now. Further, chemicals and equipment furniture for class rooms, dormitory and dining hall and utensils for the kitchen etc have to be purchased and made available. Buildings and livestock for the animal husbandry yard have to be got ready. Provision should also be made for the teaching, secretarial and other staff. It is estimated that a sum of two and a half lakhs of rupees will be required to complete this programme.

It is the considered view of the Academic Committee that the campus of the Centre should present the appearance of a farm at the time the first batch of students are admitted. Mr. P. Jeganathan, Director of the Training Centre had drawn up development programems covering the various aspects of activities to be undertaken in conection with the establishment of the Agriculture and Animal Husbandry Training Centre. These programmes which have been approved is estimated to cost Rs. 9050/- Arrangements are being made to clear an extent of about 15 acres of land at Uppuveli for cultivaton of highland crops and manawari paddy. Arrangements, are under consideration to complete the animal husbandry yard to offer training in poultry farming, goat farming and piggery. Till such time as these items are ready it will not be possible to commence the training of students at the Centre.

11. LANDS:

All efforts made in the past to secure Crown land for the activities of the Movement have not met with any success. An application has been made in September 1965 for the lease of 750 acres of Crown land in Vavuniya and Trincomalee Districts. In this connection, the President and the Administrative Secretary interviewed the Permanent Secretary to the Ministry of Lands, Irrigation and Power on 28th October 1965. Government decision on this matter is awaited.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. RAIN GAUGE STATION:

A rain gauge station has been set up in the Movement's premises at Uppuveli. The necessary apparatus for the station was given by the Meterological Department. The Director of the Centre, Mr. P. Jeganathan is in charge of this station. The data collected at the station is sent to the Meterological Department. Records of rain fall are maintained by the Director. In course of time the study of the pattern of rainfall will be necessary for the determination of the cultivation of agricultural crops.

## 13. DAMAGE BY CYCLONE:

Damage to the value of about Rs. 20,000/- was caused to the properties of the Movement at Uppuveli as a result of the cyclone in December 1964. The damages have since been repaired.

## 14. NAVALAR HALL:

The Council appointed a committee to examine the working of Navalar Hall and to evolve measures to put the Institution on a sound footing. The Committee consisting of the following:-

Prof. A. W. Mailvaganam (Chairman)
Mr. N. Krishnadasan
Mr. R. Rajaratnam
Mr. K. A. Selliah
Mr. C. Rasiah
Mr. S. Arumuganathan
Mr. S. Selvaratnam
Mr. C. Satkunananthan
Mr. C. Kandasamy
Mr. P. Kathiravelupillai (Convener)

was appointed by the Council. The Committe recomended that Navalar Hall should conduct day classes in addition to the evening classes. Arrangements were made to conduct G. C. E. (Advanced Level) and G. C. E. (Ordinary Level) classes. The committee also recomended the appointment of a full time paid principal. In accordance with the recommendation, Mr. M. Kidnapillai M. A. (Cantab) B.Sc. (Lond.) Retired Principal of the Junior Technical School, Jaffna was appointed Principal Navalar Hall.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Navalar Hall is at present administered according to the constitution by a Board of Governors. The Board of Management was replaced by Board of Governors consisting of:-

Prof. A. Sinnathamby (Chairman)
Prof. P. K. Chanmugam
Mr. C. Rasiah
Mr. N. Krishnadasan
Mr. S. Selvaratnam
Mr. C. Satkunananthan
Mr. C. Kandasamy
Mr. M. Kidnapillai - Principal and
Mr.P. Kathiravelupillai:- Registrar, Navalar Hall, Secretary.

During the period under reference the Movement has given agrant of Rs. 21,000 to meet the capital expenditure required for the running of the Hall. By and large Navalar Hall was able to meet its recurrent expenditure without much financial assistance from the Movement.

15. MEMBERSHIP:

There has been a large drop out in the membership of the Movement and the Council which is alive to this situation, did not make any attempts to enrol new members or to persuade those who had ceased to be members to continue their membership. It was felt that any attempt to increase the membership of the Movement should be made after substantial progress has been made in the matter of establishing thePractical Agriculture andAnimal Husbandry Training Centre. It is hoped that those who had allowed their membership to lapse will after persuing this report re-join the Movement and help it to start the courses in Agriculture and Animal Husbandry at an early date.

Sgd. S. Selvaratnam
*Hony. General Secretary*

Colombo.
3-3-1966.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Staff Quarters exterior view
அதிபர் விடுதி புறத்தோற்றம்



Implement Stores and Engine Room exterior view
மின்சார நிலையமும் பண்டகசாலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dining Hall exteior view
உணவுக்கூட வெளித்தோற்றம்



Dining Hall interior view
உணவுக்கூட உட்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Dormitory exterior view
உறங்குகூடம் வெளித்தோற்றம்



Dormitory interior view
உறங்குகூடம் உட்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Tilling the paddy field T. U. M.Uppuveli
இயக்கத்தின் வயலில் உழவு



Intercultivating a plot of Chillies T. U. M. Uppuveli
இயக்க நிலத்தில் மிளகாய்த்தோட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Kitchen
சமையலறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Printers*

THE JUBILEE PRESS

*16, Lauries Road,*

*Colombo 4*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org